பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

16 10 2024 **WEDNESDAY** **6.30 PM**

தலைப்புச் செய்திகள்

1. பருப்பு வகைகள், கடுகு உள்ளிட்ட ரபி பயிர்களுக்கு குறைந்த பட்ச ஆதரவு விலையை உயர்த்துவதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
2. மத்திய அரசு ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கு ஜுலை முதல், 3 சதவீத அகவிலைப்படி உயர்வு அறிவிக்கப்பட்டுள்ளது.
3. சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் மழைநீர் வடிகால் பணிகள் துரிதமாக நடைபெற்று வருவதாக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.
4. தென்மேற்கு வங்கக்கடலில் நிலைகொண்டுள்ள காற்றழுத்த தாழ்வு மண்டலம் நாளை அதிகாலை சென்னை அருகே கரையை கடக்கக்கூடும் என்றும், சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு மாவட்டங்களில் அதிகனமழை பெய்யக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
5. உலகக்கோப்பை துப்பாக்கிச்சுடும் இறுதிப்போட்டியில் இந்தியாவின் **Akhil Sheoran** வெண்கலப்பதக்கம் வென்றார்.

*---- இனி விரிவான செய்திகள் ---*

<<<<<<>>>>

2025-26-ஆம் ஆண்டு ரபி பருவ பயிர்களுக்கான குறைந்த பட்ச ஆதரவு விலையை உயர்த்துவதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

இன்று பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற மத்திய அமைச்சரவைக் கூட்டத்திற்குபின்னர் செய்தியாளர்களிடம் இதை தெரிவித்த தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ், கடுகுக்கு குவிண்டாலுக்கு 300 ரூபாயும், கொள்ளு, மைசூர் பருப்பு ரகங்களுக்கு குவிண்டாலுக்கு 275 ரூபாயும், இதர பருப்பு வகைகளுக்கு குவிண்டாலுக்கு 210 ரூபாயும் குறைந்த பட்ச ஆதரவு விலை வழங்குவதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

மத்திய அரசு ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கு அகவிலைப்படி மூன்று சதவீதம் உயர்த்தப்படுவதாகவும் அவர் அறிவித்தார்.

இந்த அகவிலைப்படி உயர்வு கடந்த ஜுலை மாதம் முதல் அமலுக்கு வருகிறது.

இதனால், 49 லட்சம் மத்திய அரசு ஊழியர்களும், 64 லட்சம் ஓய்வூதியதாரர்களும் பயன்பெறுவர்.

வாரணாசி பண்டிட் தீன்தயாள் உபாத்யாயா பல்தட இருப்புப்பாதை திட்டத்திற்கும், உத்தரப்பிரதேச மாநிலத்தின் கங்கை நதியின் குறுக்கே புதிய ரயில் மற்றும் சாலை போக்குவரத்து பாலம் அமைக்கவும் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இந்த இருப்புப்பாதை மற்றும் சாலை திட்டங்கள் பயன்பாட்டிற்கு வரும்போது, போக்குவரத்து செலவு கணிசமாக குறைவதோடு, பயண நேரம் கணிசமாக குறைக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

இந்த திட்டத்திற்காக 2 ஆயிரத்து 642 கோடி ரூபாய் செலவிடுவதற்கும் அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதாகவும் திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

<<<<<<>>>>

தமிழகத்தில் சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம் ஆகிய நான்கு மாவட்டங்களில் அடுத்த 24 மணிநேரத்தில் ஓரிரு இடங்களில் கனமுதல், அதிகனமழை வரை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையத்தின் தென் மண்டல தலைவர் திரு பாலச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

இன்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், காற்றழுத்த தாழ்வு மண்டலம் நாளை அதிகாலை நெல்லூர் - புதுச்சேரிக்கும் இடையே சென்னையையொட்டி கரையை கடக்கக்கூடும் என்று கூறினார்.

சென்னை உள்ளிட்ட நான்கு மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் அதிக கனமழைக்கு வாய்ப்புள்ளதாகவும் திரு பாலச்சந்திரன் தெரிவித்தார்.

<<<<<<>>>>

சென்னையில் மழை வெள்ள பாதிப்புகளுக்கு விரைவில் நிரந்தர தீர்வு கிடைக்கும் என்று முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னையை அடுத்த பள்ளிக்கரணை நாராயணபுரம் ஏரியை நேரில் பார்வையிட்டபின் செய்தியாளர்களிடம் பேசிய முதலமைச்சர், கடந்த மூன்று மாதமாக மேற்கொள்ளப்பட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் முடிக்கப்பட்டுள்ள மழைநீர் வடிகால் பணிகள் இந்த மழையின்போது பெரிய அளவிலான பாதிப்புகளிலிருந்து மக்களை பாதுகாத்துள்ளதாக தெரிவித்தார்.

வெள்ள மீட்புப்பணிகளில் அரசு மற்றும் மாநகராட்சி அதிகாரிகள், ஊழியர்கள் மற்றும் தூய்மைப்பணியாளர்கள் சிறப்பாக செயல்பட்டதாகவும் அவர் கூறினார்.

<<<<<<>>>>

சென்னை மாநகராட்சி பகுதிகளில் படகுகள் செல்ல முடியாத பகுதிகளில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ட்ரோன் மூலம் அத்தியாவசியப் பொருட்கள் வழங்கும் சோதனை முன்னோட்டத்தினை மாநில நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு கே என் நேரு இன்று பார்வையிட்டார்.

தாழ்வான பகுதிகளில் உள்ள மக்களுக்கு அத்தியாவசியப்பொருட்களை வழங்குவதற்காக கருடா, கோத்தாரி மற்றும் ட்ராகோ ஆகிய மூன்று ட்ரோன்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதையும் அவர் ஆய்வு செய்தார்.

இந்த ட்ரோன்கள் மூலம் ஐந்து முதல் பத்து கிலோ வரையிலான உணவு மற்றும் மருந்துப்பொருட்களை கொண்டு செல்ல முடியும்.

துணை முதலமைச்சர் திரு உதயநிதி ஸ்டாலின், மாநில அமைச்சர்கள் திரு பி மூர்த்தி, திரு ராஜகண்ணப்பன், திரு எ வ வேலு ஆகியோரும் சென்னையின் பல்வேறு இடங்களில் பார்வையிட்டனர்.

விழுப்புரத்தில் வாய்க்கால்கள் சீரமைக்கும் பணியை அமைச்சர் திரு பொன்முடி நேரில் பார்வையிட்டார்.

ஜே சி பி மூலம் தூர்வாரும் பணிகள் தாமரைக்குளம், கட்டபொம்மன் நகர், பாண்டியன் நகர் உள்ளிட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

திருப்பூர் மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழையை எதிர்கொள்வதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாக மாநில செய்தித்துறை அமைச்சர் திரு சாமிநாதன் தெரிவித்துள்ளார்.

திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற இதற்கான ஆய்வுக்கூட்டத்தில் பங்கேற்று பேசிய அவர், பருவமழை காலத்தில் தாழ்வான பகுதிகளில் உள்ள மக்களை பாதுகாப்பாக தங்கவைக்க 52 நிவாரண முகாம்கள் தயார் நிலையில் உள்ளதாக தெரிவித்தார்.

திருப்பூர் மாநகர பகுதிகளில் குப்பைகளை அகற்றுவதற்கான பணிகளும் தற்போது நடைபெற்று வருவதாக அவர் கூறினார்.

<<<<<<>>>>

மழை எச்சரிக்கையையடுத்து, இந்திய கடலோர காவல்படையின் 29 பேரிடர் நிவாரண குழுக்கள் தயார் நிலையில் இருப்பதாக கடலோர காவல்படை தெரிவித்துள்ளது.

மொத்தம் 148 வீரர்களை கொண்ட இந்த குழுக்கள் பேரிடர் மீட்புப்பணிகளை மேற்கொள்ள உதவும் படகுகள், உயிர்காக்கும் மற்றும் மீட்புக்கான உபகரணங்கள் போன்றவற்றுடன் தயார் நிலையில் உள்ளதாக இந்திய கடலோர காவல்படையின் கிழக்கு மண்டல அலுவலகம் தெரிவித்துள்ளது.

வட தமிழகம், தெற்கு ஆந்திர பகுதிகளில் தற்போது நிலவும் வானிலையை கருத்தில்கொண்டு, மீனவர்கள் உடனடியாக கரைக்கு திரும்புமாறு ஒலிபெருக்கிகள் மூலம் கடலோர காவல்படை வீரர்கள் அறிவுறுத்தி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>

*மாவட்டச் செய்திகள்*

நாமக்கல் மாவட்டத்தில் அரசு துறைகள் சார்பில் நடைபெற்றுவரும் பல்வேறு திட்டப்பணிகளை மாவட்ட கண்காணிப்பு அலுவலர் திருமதி ஆசியா மரியம் இன்று ஆய்வு செய்தார்.

-----------------

தீபாவளி பண்டிகையையொட்டி, தஞ்சாவூர் மாவட்டத்தில் பட்டாசு வியாபாரிகள் அரசு அனுமதி அளித்த இடத்தில் பாதுகாப்பான முறையில் பட்டாசுகளை விற்பனை செய்ய வேண்டும் என்று மாவட்ட தீயணைப்புத்துறை அலுவலர் திரு குமார் தெரிவித்துள்ளார்.

----------------

திருப்பத்தூர் மாவட்டத்தில், காவல்துறை சார்பில் குறைதீர் கூட்டம் இன்று நடைபெற்றது.

-----------

தூத்துக்குடி முறப்பநாடு பகுதியில் இருந்து இலங்கைக்கு கடத்தப்பட இருந்த 50 கிலோ போதைப்பொருட்களை கடலோர பாதுகாப்பு குழும காவல்துறையினர் கைது செய்தனர்.

**<<<<<<>>>>>**

*விளையாட்டுச் செய்திகள்*

உலகக்கோப்பை துப்பாக்கிச்சுடும் இறுதிப்போட்டியில் இந்தியாவின் **Akhil Sheoran** வெண்கலப்பதக்கம் வென்றார்.

புதுதில்லியில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் 50 மீட்டர் ரைபிள் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

----------------

பெங்களூருவில் நடைபெறவிருந்த இந்தியா – நியூசிலாந்து அணிகளுக்கு இடையேயான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் முதல் நாள் ஆட்டம் மழை காரணமாக கைவிடப்பட்டது.

இரு அணிகளுக்கும் இடையே மூன்று போட்டிகளைக் கொண்ட இந்த தொடரில் இரண்டாவது போட்டி இம்மாதம் 24-ஆம் தேதி புனேயிலும், மூன்றாவது மற்றும் இறுதி டெஸ்ட் போட்டி அடுத்த மாதம் ஒன்றாம் தேதி மும்பையிலும் நடைபெறவுள்ளது.

----------

லண்டன் **WR** செஸ் மாஸ்டர்ஸ் போட்டியில் இந்தியாவின் அர்ஜூன் எரிகேசி மற்றும் பிரக்ஞானந்தா அரையிறுதிக்கு முன்னேற்றியுள்ளனர்.

**<<<<<<END>>>>>>**